* 274 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா திருத்துறைப்பூண்டி தாலுகாவில் உள்ள உம்பளச்சேரி இன பொலிக் காளைகள் அகில இந்திய அங்கீகாரம் பெற்ற கால்நடை இனம் தானா?

(இ) கீழ்த்தஞ்சை பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களில் 1963-64-க்கு எத்தனை கூட்டு மன்றங்களுக்கு உம்பளச்சேரி இன மாடுகள் premium ஆக கொடுக்கப்பட்டுள்ளது, கூட்டு மன்ற வாரியாக?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) இந்திய அரசாங்கம் இந்நாட்டில் வெவ்வேறு மண்டலங்களுக்கான மாடுகள் இனக்கலப்புக் கொள்கையை வகுக்கையில் உம்பளச்சேரி இனமாடுகளை அங்கிகரிக்கப்பட்ட மாட்டினங்களில் ஒன்றென நிச்சயித்து, ஒப்புக் கொண்டு இருக்கிறது. அதனை அகில இந்திய முக்கியத்துவம் பெற்ற மாட்டினமாக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் ஏற்றுக் கொள்ளவில்லை.

(இ) சபைமுன் ஒரு விவர அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. இராம. அரங்கண்ணல்: சார், நல்ல தரமான மாடுகள் தமிழ்நாட்டில் ஏராளம் இருக்கின்றன. இவற்றை இன்னும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் மேலும் 50 லட்சம் ரூபாய் செலவு செய்து ஒரு திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற யோசனையும் இருக்கிறது. இந்தத் திட்டத்தின் படி இந்தப் புதிய பண்ணையை ஓரிடத்தில் அமைப்பதற்குப் பதிலாக, நஞ்சை நிலங்கள் ஏராளமாக இருக்கின்றது கோவில்களில் ஏற்படுத்தலாம். பல கோவில்களிலும் பண்ணைகளை ஏற்படுத்தி நல்ல முறையில் மாடுகளை அபிவிருத்தி செய்வது தொடர்ந்து இருந்து வரும் பழக்கமாகும். ஆகவே, இந்த 50 லட்சம் ரூபாயையும் தமிழ் நாட்டிலுள்ள கோவில்களுக்கு வழங்கி உம்பளச்சேரி மாடுகளை அபிவிருத்தி செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: உம்பளச்சேரியிலிருந்து அதிகப்படியாகப் பால் வராது. கனம் அங்கத்தினர் இப்போது கேட்கும் கேள்வி முன்னால் போடப்பட்ட கேள்வியோடு சேர்ந்தது. இந்தக் கேள்விக்குச் சம்பந்தமில்லை.

கனம் திரு. ஆ. கு. சுப்பையா: சார், உம்பளச்சேரி காளைகளுக்குப் பதிலாக காங்கேயம் காளைகளைத்தான் வாங்கவேண்டும் என்று சர்க்காரிலிருந்து ஏதாவது தாக்கீது அனுப்பியிருக்கிறார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: அப்படி ஒன்றுமில்லை. தஞ்சை ஜில்லாவில் உம்பளச்சேரி மாடுகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று அரசாங்கம் பாடுபட்டு வருகிறது. பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாடுகள் கொடுக்கப்படும் போதும் இந்த இனத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

---

a 79–80-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

4th November 1965]

திரு. சி. ம. அம்பிகாபதி: சபையில் வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையைப் பார்க்கும்போது, நன்னிலம், தலைஞயர், கீவளூர், கொரடாச்சேரி போன்ற பிளாக்குகளில் 1963--64-ல் உம்பளச்சேரி காளைகள் வாங்கி கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. இந்தப் பகுதிகளிலிருந்து அப்ளிகேஷன்கள் வரவில்லையா? அல்லது அப்ளிகேஷன்கள் வந்தும் வாங்கிக் கொடுக்கப்படவில்லையா, அப்படியென்றால், அதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்ளிகேஷன்கள் வந்ததாக என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

* 275 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal with the Government during the Fourth Plan to introduce a Scheme of Cattle Insurance in the interests of cattle breeders?

THE HON. SRI P. KAKKAN : It is proposed to introduce Cattle Insurance on a pilot basis in the Intensive Cattle Development Project areas of Madras, Madurai and Coimbatore.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் கால்நடை முனைப்பு வளர்ப்புப் பகுதிகளில் கால்நடை இன்சூரன்ஸ் திட்டத்தை ஒரு முன்னோடித் திட்ட அடிப்படையில் கொண்டு வரத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மாதவரம் பால் பண்ணை

* 276 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாதவரம் பால் பண்ணையில், பணியாளர் எண்ணிக்கையைக் குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு மதிப்பீட்டுக் குழு செய்த சிபாரிசின்மீது எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : The Milk Commissioner has retrenched a total number of 97 workers paid from contingencies in the various sections of the Madras Dairy and Milk Project as detailed below :—

Name of section in the Project.	*Number of posts retrenched*
Dairy	46
Colony	41
Miscellaneous (Calf rearing, Transport, Office, Chilling Centres, etc.)	10
Total ...	97